LIBRARY
23 SEP 1966
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 14th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

ரசாயன உரங்கள்

*குறுகிய கால கேள்வி எண் 4—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) வடாற்காடு, செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங்களிலும் இந்த போக நவரை சாகுபடிக்குத் தேவையான ரசாயன உரங்கள் Ammonium Sulphate, Urea and Nitrate குறித்த விலையில் குறித்த நேரத்தில் கிடைக்கவில்லை என்பதை அரசாங்கம் அறியுமா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. எஸ். கே. ராமசாமி: இப்போது நவரை சாகுபடி இருக்கிறது. இந்த நேரத்தில் கோஆப்பரேடிவ் ஸ்டோர்களை உரம் கேட்டால் அமோனியம் சல்பேட், யூரியா முதலியவை கிடைப்பதில்லை. ஆனால், வெளி மார்க்கெட்டில் 60 ரூபாய்க்குக் கிடைக்கிறது. இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதா? அல்லது வளர்க்கவேண்டுமென்று கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அரசாங்கத்திற்கு விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்பது தான். ஏற்கனவே உரம் ஷார்ட்டேஜ் ஆக இருப்பது தெரியும். அதற்கு மத்திய சர்க்காரின் உதவி பெற்று விவசாயிகளுக்கு உரம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். 4-வது க்வார்ட்டரிலே நாம் கேட்டதற்கு மார்ச் மாதத்திற்குள் கப்பல் மூலமாக அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய சர்க்காரிடமிருந்து வந்த பிறகு வழங்கப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: வட ஆற்காடு மாவட்டத்திற்கு யூரியா எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது? அமோனியம் சல்பேட் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது? செங்கல்பட்டு மாவட்டத்திற்கு

எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது? செங்கல்பட்டு மாவட்டத்திற்கு எவ்வளவு விநியோகிக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு அனுப்பியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். ஒரு சில இடங்களில் கோவாப்பரேடிவ் ஸ்டோர்ஸ் கூட 34 ரூபாய்க்கு விற்கிருர்கள். ஆனல், வெளியில் 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதைத் தடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

MR. SPEAKER: The hon. Member has put too many questions in one supplementary.

கனம் திரு. பூ. கக்கன் : தாலுக்காவாரியாகக் கணக்கு என்னிடத்தில் இல்லே. விவரமாகத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன். விவசாயிகளுக்கு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் மாவட்டத்தில் நவரை சாகுபடி செய்வதற்கு உரம் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்ற அக்கறை எடுத்துக் கொண்டுதான் நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் கேட்டு, மேலும் பெறவேண்டும் என்று பிரயத்தனம் செய்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலேவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் முதல் அறிக்கையிலே இந்த ஆண்டு நவரையில் நல்ல பலன் எதிர்பார்க்கப்படுகிறது, எதிர்பார்க்கிருேம், நல்ல பலன் வரும் என்று சொன்னர்கள். ஆனல் கனம் விவசாய அமைச்சர் பதில் சொல்லும்போது உரம் மார்ச் மாதம் கடைசியில்தான் வரும் என்று சொல்லுகிருர்கள். மார்ச் கடைசியில் வந்தால் அதை எந்தப் பயிருக்குப் போடுவது, என்ன பலன் கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது நடப்பதே மார்ச் மாதம் தான். இந்த மாதம்தான் வரும் என்று எதிர்பார்க்கிருேம். வந்த பிறகு கொடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : நிதிநிலே அறிக்கையில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ரசாயன உரம் பற்றுக்குறை காரணத் தால்தான் உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது, போதுமான அளவு கிடைக்கவில்லே என்று சொல்லியிருக்கிருர்கள். இப்பொழுது நாம் மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு கேட்டிருக்கிருேம் எவ்வளவு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு கேட்டோம், எவ்வளவு கொடுத்திருக்கிருர்கள் என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லே.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அமைச்சர் அவர்கள் "நாங்கள் கேட்டிருக்கிருேம், அவர்கள் கொடுப்பதாக வாக்குறுதி அளித் திருக்கிருர்கள்" என்பதாகச் சொன்னர்கள். அப்படியிருக்கும் பொழுது எவ்வளவு கிடைக்கும் என்று தெரிந்திருக்கவேண்டும். அது எவ்வளவு என்று பார்த்து விவரம் சொல்லமுடியுமா ?

(பதில் இல்லே).

14th March 1966]

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம் : கனம் அமைச்சர் அவர்கள் கப்பலில் உரம் வருவதாகச் சொன்னார்கள். அது எவ்வளவு வருகிறது? என்ன ரக உரம் வரும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : மத்திய சர்க்கார் கொடுக்கிறது. நமக்கு எவ்வளவு அலாட் பண்ணுவார்கள் என்பது பிறகுதான் தெரியும்.

THE HON. SRI P. KAKKAN : A shipment of 20,000 tons of ammonium sulphate is expected before the end of this month.

அரிசனங்களுக்கு மனைக்கட்டுகள்

*272 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்டும் மனை வழங்குவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கான சாத்தியக்கூறு பற்றி பரிசிலிக்க அமைக்கப்பட்ட பரமேசுவரன் கமிட்டி, தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துவிட்டதா ?

(இ) ஆமெனில், அதன் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) கமிட்டியின் ரிப்போர்ட்டின் நகல்[a] சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : இந்த ரிப்போர்ட்டில் இரண்டாவது பாராவில் சொல்லப்பட்டிருக்கிற ரெகமன்டேஷன்களில் எத்தனை அமலாக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பெருவாரியான சிபார்சுகள் சாதகமாக ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் சில சிபார்சுகள் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. பரிசீலனை செய்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக அரிசனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்க நில ஆர்ஜித வேலைகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இது சம்பந்தமாக நாங்கள் அடிக்கடி எடுத்துச்சொல்லியிருக்கிறோம். இதைத் தடுப்பதற்கு புதிய வழிமுறைகள், திட்டங்கள் வகுக்கப்பட்டு பரிசீலனையில் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : நில ஆர்ஜிதம் செய்வது ஆமை வேகத்தில் இல்லை. எவ்வளவு துரிதமாக நிலங்களை ஆர்ஜிதம் செய்து அரிசனங்களுக்கு மனைக்கட்டுகளை வழங்க முடியுமோ அந்த விதத்தில் வழங்கவேண்டுமென்பதற்காகத்தான் இதைப்

a Laid on the Table of the House on 14th March 1966.